முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 24-07-2024

# பாதை மாறட்டும், பழக்கம் மாறட்டும்!

பாதையை மாற்றாதீர்கள் என்பதுதான் வழக்கமாகச் சொல்வது. ஆனால் அது தவறான பாதையாக இருக்குமானால், 'பாதையை மாற்றுங்கள்' என்று சொல்வதே சரியானதாக இருக்கும். ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பொறுத்தவரையில் 'பாதை மாறட்டும்' என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், தொடர்ந்து தவறான பாதையில் பயணிப்பவர்கள் அவர்கள்!

**பெரும்பான்மை பலத்தை பா.ஜ.க.வுக்கு இந்திய நாட்டு மக்கள் வழங்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியவில்லை. மாநிலக் கட்சிகள் சிலவற்றைச் சேர்த்துக் கொண்டு ஆட்சியை அமைத்துள்ளது பா.ஜ.க. தன்னை கடவுளின் அவதாரமாகக் காட்டிக் கொண்ட மோடி, கூட்டணி அமைச்சரவைக்குத்தான் தலைமை தாங்க முடிந்தது. கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடம் கற்றிருக்க வேண்டும். இனியாவது தங்கள் பழக்கத்தையும் மாற்றி, பாதையையும் மாற்றிக் கொள்ள வேண்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசு என்பதே நமது வேண்டுகோள் ஆகும்.**

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை இன்று தாக்கல் ஆக இருக்கிறது. அதில் தமிழ்நாட்டுக்கான திட்டங்களாக எவை எவை இடம்பெற வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் மெட்ரோ ரயில் திட்டத்துக்கான நிதியை விடுவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

மெட்ரோ ரயில் திட்டத்துக்கான நிதியை ஒன்றிய அரசு தரவில்லை. அதற்கான காரணத்தை அவர்களால் சொல்ல முடியவில்லை. மெட்ரோ ரயில் இரண்டாம் திட்டங்களில் ஒன்றிய அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. அந்த திட்டத்தின் நிதி ஒதுக்கீடு என்பது ஒன்றிய அரசும், மாநில அரசும் 50 : 50 விழுக்காடு பங்கிட்டுத் தர வேண்டும். மெட்ரோ இரண்டாம் கட்டப் பணி என்பது ரூ.63 ஆயிரம் கோடி செலவாகும். பா.ஜ.க. அரசு இதற்கு பணம் ஒதுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் பலமுறை கோரிக்கை வைத்து கடிதம் மேல் கடிதம் அனுப்பி விட்டார். பிரதமர் மோடிக்கு முன்னால் மேடையில் பலமுறை பேசியும் விட்டார் முதலமைச்சர் அவர்கள். மாநில அரசு செலவு செய்வதற்கான நிதியைத் திரட்ட பன்னாட்டு கடனுதவி பெறுவதற்கும் அனுமதி தரவில்லை. மாநில அரசு இந்த ஆண்டு 9 ஆயிரம் கோடியை ஒதுக்கி இருக்கிறது. ஒன்றிய நிதி வரவில்லை என்றால் இந்த திட்டத்தை முழுமையாக மாநில அரசின் நிதியில் இருந்துதான் செயல்படுத்த வேண்டும். ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடியை இதற்காக ஒதுக்கினால்தான் மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்தை செயல்படுத்தி முடிக்க முடியும்.

கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான ஒப்புதலை விரைந்து வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திட முழுமையான நிதியை ஒதுக்கீடு செய்யுங்கள் என்றும் கோரிக்கை வைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

'சில மாநில அரசுகள் இலவச பயணம் என அறிவிக்கிறார்கள், இதனால் மெட்ரோ ரயில்களில் கூட்டமில்லை. எனவே மெட்ரோ திட்டங்களால் பயனில்லை' என்று தேர்தல் நேரத்தில் பேசியவர்தான் நமது பிரதமர் மோடி. இலவசப் பயணங்களுக்கும் மெட்ரோ ரயில்களுக்கும் என்ன தொடர்பு? மக்கள் தொகைப் பெருக்கமுள்ள நாட்டில் எத்தனை வகையான வசதிகள் செய்யப்பட்டாலும் அவை அனைத்திலும் கூட்டம் இருக்கத்தான் செய்யும். பேருந்து வசதி என்பது ஊருக்கு ஊர், கிராமத்துக்கு கிராமம் இருக்கும் திட்டம் ஆகும். மெட்ரோ ரயில்கள் ஒரு சில பெருநகரங்களில் மட்டுமே சாத்தியமான திட்டம் ஆகும். இலவச பஸ் பயணத்தையும், மெட்ரோ ரயில் பயணத்தையும் பிரதமரால் எப்படி ஒப்பிட முடிந்தது என்றே தெரியவில்லை. அதனால்தான் தமிழ்நாடு மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு பணம் ஒதுக்க மறுக்கிறாரா பிரதமர்?

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி வழங்கப்பட்டது பிரதமருக்கு பிடிக்கவில்லையா? அதனால்தான் மெட்ரோ திட்டங்களை முடக்கி வைக்க நினைக்கிறாரா பிரதமர்?

தாம்பரம் – செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவு சாலைத் திட்டத்துக்கான ஒப்புதலை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். கிராமப்புற – நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பை உயர்த்த வேண்டும் என்பதும் முதலமைச்சரின் கோரிக்கை ஆகும்.

**"மாநிலங்களின் நிதி உரிமையை – வலிமையைப் பறிப்பது என்பது அதன் ஆக்ஸிஜனை நிறுத்துவது ஆகும். அதனைத் தான் பா.ஜ.க. அரசு செய்து வருகிறது"** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை சொன்னார். அதனைத்தான் பா.ஜ.க. அரசு இதுவரை செய்தது. இனியும் அதைச் செய்யக் கூடாது. 'அரசியல் சட்டத்தை காப்பேன்' என்று உறுதிமொழி அளித்துள்ள பிரதமர் அவர்கள், கூட்டாட்சித் தன்மையைக் காக்கும் செயல்களைச் செய்ய வேண்டுமே தவிர, அரசியலமைப்புச் சட்டத்தை சிதைக்கும் செயல்களைச் செய்யக் கூடாது.

**தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.க.வுக்கு ஏன் வாக்களிப்பது இல்லை என்பதை இனியாவது உணர்ந்து செயல்பட வேண்டும்.**

### முதல்வர் ஆய்வு செய்ததை விமர்சிக்கும்

# எடப்பாடிதான் நாடகம் நடத்துகிறார்!

## அமைச்சர் துரைமுருகன் பதிலடி!



**வேலூர், ஜூலை 24 - அம்மா உணவகத்தில் திடீரென நடத்திய ஆய்வை விமர்சிக்கும் எடப்பாடிதான் நாடகம் நடத்துகிறார் என அமைச்சர் துரைமுருகன் தெரிவித்து உள்ளார்.**

வேலூர் மாவட்டம் காட்பாடியில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தென்பெண்ணை ஆறு குறித்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தோம். தென்பெண்ணை ஆற்றுக்கு ஆணையம் அமைக்க வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பு.

கர்நாடக அரசு ஆணையம் அமைக்கக் கூடாது என கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் நாங்கள் ஆணையம் அமைப்பதில் உறுதியாக உள்ளோம்.

காரணம் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகள் தீர்ப்பது நல்லது. ஆனால் பிடிவாதக்காரர்களிடம் அது முடியாத காரியம். சுமார் 50 முறை பேசியிருக்கிறோம். அதன்பிறகு ஆணையம் அமைக்க கேட்டோம்.

அம்மா உணவகத்தில் முதல்வர் நடத்திய திடீர் ஆய்வை நாடகம் என எடப்பாடி பழனிசாமி விமர்சிக்கிறார். எடப்பாடிதான் நாடகம் நடத்துவார். அவர்களது கட்சியில் மட்டும்தான் நாடகங்கள் நடக்கும்.

அறநிலையத்துறை இடத்தில் கடந்த ஆட்சியில் ரூ.198 கோடி கனிம வள கொள்ளை நடந்துள்ளது. கனிம வளக்கொள்ளை என்பது கடந்த ஆட்சியில் நடந்துள்ளது. அது தற்போது நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்திருப்பது வரவேற்கத் தக்கது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

# சிங்கப்பூரில் - பாவேந்தர் பாரதிதாசன் 134ஆம் பிறந்தநாள் விழா!

## தி.மு.கழக இலக்கிய அணிப் புரவலர் புலவர் செந்தலை ந.கவுதமன் பங்கேற்பு!

*சிங்கப்பூர், ஜூலை 24- சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம் சார்பில் , பாவேந்தர் பாரதிதாசன் 134ஆம் பிறந்தநாள்விழா சிங்கப்பூர் தேசிய நூலகப் பதினாறாம் தளத்தில் 20.7.2024 காலை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.*

*சிறப்பு விருந்தினராகத் தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருதாளரும் திமுக இலக்கிய அணி மாநிலப் புரவலருமான கோவை சூலூர் பாவேந்தர் பேரவை நெறியாளர் புலவர் செந்தலை ந.கவுதமன் பங்கேற்றார்.*

*அவரை நடுவராகக் கொண்டு சுழலும் சொற்போர் நிகழ்ச்சி நிகழ்ந்தது. பாரதிதாசனின் குடும்ப விளக்கு காப்பியத்தில் பெரிதும் வலியுறுத்தப் பெறுவது பெண்ணின் பெருமையே, சமூக விழிப்புணர்வே, குடும்பப் பிணைப்பே எனும் தலைப்புகளில் முத்து சுவேதா, சுவர்ணலதா, வானதி பிரகாசு வாதிட்டனர்.*

*சமூக விழிப்புணர்வு இருந்தால்தான் பெண்ணுரிமைக்கு இடமுண்டு. குடும்பப்பிணைப்பு சீர்குலைந்தால் சமுக அமைப்பே சீர் குலைந்துவிடும். குடும்பப் பிணைப்பே குடும்ப விளக்கில் முதன்மையாய் வலியுறுத்தப்படுகிறது என நடுவர் தீர்ப்புரைத்தார்.*

*ஐந்து பாகம் கொண்டது குடும்பவிளக்கு. கல்விஒளியின் தேவையை அறிந்த குடும்பத்தை விளக்குக்கு நிகராகப் பாரதிதாசன் போற்றுகிறார். கல்வியறிவு இல்லாத வீட்டை இருண்ட வீடு என்கிறார் . அவர் படைத்த குடும்பவிளக்கு, இருண்டவீடு இரண்டும் முரண்பட்ட சுவைதரும் சிறந்த சிறுகாப்பியங்கள். தீர்ப்புரையாகவும் சிறப்புரையாகவும் பாவேந்தர் பாரதிதாசனின் இலக்கியப் பங்களிப்பைச் செந்தலை கவுதமன் விளக்கிப் பேசினார்.*

*மன்றத்தலைவர் முனைவர் இரத்தின வேங்கடேசன் நோக்கவுரை ஆற்றினார். துணைத்தலைவர் பொறியாளர் இறை.மதியழகன் அறிமுகவுரை வழங்கினார்.*

*அயலகத் தமிழர் வாரியத் தலைவர் தணிக்கையாளர் இராமு தலைமைதாங்கினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தினகரன் வாழ்த்துரை வழங்கினார்.*

*பாவேந்தர் இசையோடும் நடனத்தோடும் நிகழ்ச்சி தொடங்கியது. சிங்கப்பூர் எழுத்தாளர் சங்கத்தலைவர் நா.ஆண்டியப்பன், திரைப்படத் தயாரிப்பாளர் அருள்சந்திரன், தொழிலதிபர் சத்தியா, இலக்கிய அமைப்பாளர் அரிகிருட்டிணன் முதலியோர் முன்னிலை வகித்தனர். சிங்கப்பூர் இலக்கிய ஆர்வலர்கள் குடும்பத்தோடு பெருந்திரளாகப் பங்கேற்றனர்.*

*அரங்க.இராமசாமி நன்றியுரைக்குப் பின் அனைவரும் மதிய விருந்தில் பங்கேற்றனர்.*



சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம் சார்பில், பாவேந்தர் பாரதிதாசன் 134ஆம் பிறந்தநாள்விழா சிங்கப்பூர் தேசிய நூலகப் பதினாறாம் தளத்தில் 20.7.2024 காலை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராகத் தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருதாளரும் தி.மு.க. இலக்கிய அணி மாநிலப் புரவலருமான கோவை சூலூர் பாவேந்தர் பேரவை நெறியாளர் புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்கள் பங்கேற்றார். அவரை நடுவராகக் கொண்டு சுழலும் சொற்போர் நிகழ்ச்சி நிகழ்ந்தது. பாரதிதாசனின் குடும்பவிளக்கு காப்பியத்தில் பெரிதும் வலியுறுத்தப் பெறுவது பெண்ணின் பெருமையே, சமூக விழிப்புணர்வே, குடும்பப் பிணைப்பே எனும் தலைப்புகளில் முத்துசுவேதா, சுவர்ணலதா, வானதிபிரகாசு ஆகியோர் வாதிட்டனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலையில்

# புதிய நகரப் பேருந்து வழித்தடத்தை நீட்டித்து அரசு பேருந்து!

## வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஜூலை 24 – நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஒன்றியம், பெரப்பன்சோலை மற்றும் பெத்தநாயக்கன்பட்டியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் தம்மம்பட்டி கிளையிலிருந்து தற்போது பி28 வழித்தட எண் வழியாக தற்போது தம்மம்பட்டி, நாரைக்கிணறு, இராஜபாளையம், மெட்டாலா உள்ளிட்ட வழித்தடங்களில் பேருந்து இயக்கப்பட்டு வந்த பேருந்தை நாரைக்கிணறு, பிலிப்பாக்குட்டை, கப்பலூத்து உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் பயன்பெறும் வகையில் பேருந்து இயக்க வழித்தடம் நீட்டிக்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி பேருந்து வழித்தட துவக்க விழா பெத்தநாயக்கன்பட்டியில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு புதிய பேருந்து வழித்தடத்தை நீட்டித்து அரசு பேருந்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் தம்மம்பட்டி கிளையிலிருந்து தற்போது பி28 வழித்தட எண் வழியாக தற்போது தம்மம்பட்டி, நாரைக்கிணறு, இராஜபாளையம், மெட்டாலா உள்ளிட்ட வழித்தடங்களில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும் இன்றைய தினம் நாரைக்கிணறு, பிலிப்பாக்குட்டை, கப்பலூத்து உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தம்மம்பட்டியில் இருந்து காலை 7:00 மணி முதல் மாலை 4:40 வரை பேருந்து இயக்க வழித்தடம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், தம்மம்பட்டி கிளையில் இருந்து டீ2 வழித்தட எண் வழியாக தம்மம்பட்டி, முள்ளுக்குறிச்சி, பெரிய கோம்பை உள்ளிட்ட வழித்தடங்களில் பேருந்து இயக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது முள்ளுக்குறிச்சி முதல் பெரப்பன்சோலை வரை காலை 7:50 மணி முதல் மாலை 5.35 மணி வரை பேருந்து இயக்க வழித்தடம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பணிக்கு செல்பவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் அதிகளவில் பயன்பெறுவர்.

இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, அ.அசோக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருச்சிற்றம்பலம் பகுதியில் புதிய அரசு கலைக் மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்தினை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி.கே.டி.முரளி, துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி.முரளி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், க.மும்மூர்த்தி, வே.கணேசன், கு.செல்வமணி, நகரச் செயலாளர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், மருத்துவர் அணி வினோ பாரதி, வர்த்தகர் அணி ராமதாஸ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பிரேமா குப்புசாமி, கௌதம், அன்புமணி, ஒன்றிய நிர்வாகிகள் சங்கர், நெடுஞ்செழியன், பாலு, கே.ஜி.சங்கர், எத்திராஜ், எழிலரசி முத்தமிழ், ஏழுமலை, சம்பத், இளைஞர் அணி ராஜவேல், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் புவனேஸ்வரி ராமதாஸ், காமாட்சி விஜய்ரங்கன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.இறுதியாக கல்லூரி முதல்வர் நன்றியுரையாற்றினார்.